தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1980 ஜூன் 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள் தீர எண்ணிச் செயல்."

ஒன்றைச் செய்யத் தொடங்கும்போது, அதற்கு வேண்டிய பொருள், அதற்கு ஏற்ற கருவி, தகுந்த காலம், செயல் முறை, செய்தற்குரிய இடம் ஆகிய இந்த ஐந்தினையும் மயக்கம்தீர எண்ணிப்பார்த்த பின்பு, அந்தச் செயலைச் செய்ய வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினா.

மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கல்.

*கு.கா.வி. எண். 2. திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் நோட்டுப்புத்தகங்கள் கிடைக்கப்பெறாமல் அவதியுறுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) : நோட்டுப் புத்தகங்கள் தயார் செய்து விற்பதற்காக, தமிழ்நாட்டிற்கு மைய அரசு வழங்கும் மலிவு விலைக் காகிதத்தை தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுனத்திற்கு வழங்கி, மேற்படி நிறுவனம் மூலமாக நோட்டுப் புத்தகங்களை தயார் செய்து, விற்பனைக்கு விநியோகம் செய்ய 1979 செப்டம்பர் மாதம் அரசு உத்திரவிட்டுள்ளது. அதன்படி காகிதங்களை நோட்டுப் புத்தகங்களாகத் தயாரித்து கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகம் மூலமாக பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளது. தமிழக பள்ளி, கல்லூரி மாணவர்களின் மொத்தத் தேவைக்கு ஆண்டொன்றுக்கு குறைந்தது 8,000 டன் மலிவு விலைக் காகிதம் தேவைப்படும்; ஆனால், கிடைக்கப்பெறும் மலிவு விலைக் காகிதத்தின் அளவிற்கேற்ப, மைய அரசு சுமார் 6,000 டன் காகிதம் ஒரு ஆண்டிற்கு

ஒதுக்கீடு செய்கிறது. காகித ஆலைகளிலிருந்து காகிதங்கள் வரப் பெறுவதில் சற்று தாமதம் ஆகிறது. தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாளுக்குப் பின்னர் சுமார் 3,000 டன் காகிதத்தை நோட்டுப் புத்தகங்க ளாகத் தயாரித்து இதுவரை ரூபாய் 2 கோடி மதிப்புள்ள நோட்டுப் புத்தகங்களை தமிழகம் முழுவதும் விநியோகம் செய்துள்ளது. மேலும் தயாரித்து விநியோகம் செய்து வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்த நோட்டுப் புத்தகங்கள் கிடைப்பதிலே ஏற்பட்ட காலதாமதத்தினாலே மாணவர்கள் அவஸ்தைப்படுவது அதிக மாகி இருக்கிறது. கோடை விடுமுறைக்கு முன்னால் அரசாங் கம் காகிதத்தைக் கொள்முதல் செய்து மாவட்ட அளவிலே ஒவ் வொரு மாவட்டத்திலும் மையத்தை ஏற்படுத்தி, ஏன் கோடை விடுமுறையில் மொத்தமாக ஒவ்வொரு பள்ளியும் வாங்கி வைத் துக்கொண்டு உரிய காலத்திலே வழங்குவதற்கான திட்டத்தைச் செயல்படுத்தக் கூடாது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலை வர் அவர்களே, நாம் கோடை விடுமுறைக்கு முன்னால் கிடைக் கின்ற காகிதத்தைத் தந்து, அந்த நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து சென்னை, கோயம்புத்தூர், சேலம், மதுரை, கும்ப கோணம் போன்ற வட்டார நிலையங்களிலே சேமித்து வைத்து மற்றவர்கள் வாங்கிக் கொள்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். நம்முடைய நோக்கம் நோட்டுப் புத்தகங்களை பள்ளி, கல்லூரி கள் வாங்கிச் செல்ல வேண்டுமென்பதுதான். அப்படி வாங்க முடியாத சூழ்நிலையில், நாம் வேறு சில கூட்டுறவு கடை களில் விற்கும்போது, இப்படிப்பட்ட சில கிடைக்க முடியாத சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. இதை நாம் கருத்தில் கொண்டு மேற்கொண்டு சில காரியங்களை செய்ய வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மதுரை, திரு நெல்வேலி போன்ற தென் மாவட்டங்களிலே இருந்து வந்திருக்கக் கூடிய கம்பிளெயிண்ட் டெக்ஸ்ட் புக் சொஸைடி இந்த நோட்டுப் புத்தகங்களை பைண்ட் செய்வதற்கு தேர்ந்தெடுக்கக்கூடிய இந்த தனியார் பைண்டர்களால் இதைச் செய்ய இயலவில்லை என்பதும், 12 ரக நோட்டுப் புத்தகங்கள் தேவையாக இருக்கின்ற இடத்தில் 4 ரகங்களைத்தான் அவர்களால் செய்ய முடிந்தது என்பதுமாகும். அப்படி செய்ய முடியாதவர்களுக்கு டெக்ஸ்ட் புக் சொஸைடி ஆர்டர் கொடுத்ததா ? அது உண்மைதானா ? உண்மை என் றால், அதிலே ஊழல் இருக்கிறதா ? அரசாங்கம் அதைப்பற்றி என்கொயர் பண்ணத் தயாரா ?

ALONE TRIUMPHS

1980 ஜூன் 28]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இருந்த ஊழலை நீக்குவதற்காக இப்போது நடவடிக்கை எடுத்து, இந்த முறையைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். நோட்டுப் புத்தகம் தயாரிக்க யாரிடத்திலே இருந்து முறையாக விண்ணப்பம் வந்தாலும், அவர்களுக்குத் தருவதற்கு தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் தயாராக இருக்கிறது. நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பதிலே ஊழல் இருப்பதாலேதான், நாம் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இதற்கு முன்னாலே நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பதாக சிலர் வாங்கிய காகிதத்தை நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்காமலேயே விற்றுக்கொண்டிருந்தார்கள். தயாரித்ததை கேரளாவிற்கு கடத்திக் கொண்டிருந்தார்ள். அதைப் பார்த்ததற்குப் பிறகுதான், நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கின்ற இந்த அரசே காகிதத்தை விநியோகம் செய்யும் முறையை எடுத்துக் கொண்டது. இப்போது செய்வதெல்லாம் சரியாக உள்ளது என நான் கூற வரவில்லை. இப்போது ஒரு முறையை ஆரம்பித்திருக்கிறோம். இதிலுள்ள குறைபாடுகளை நீக்குவதன் மூலம், இத்தகைய சங்கடங்களை எல்லாம் போக்க முடியும். இதிலே நாம் எல்லாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதிலே பாதிக்கப்பட்ட தனியார் சிலர் ஒன்றை ஒன்பதாக்கிச் சொல்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கு நாம் பலியாகாமல், நாம் ஏற்றுக்கொண்டுள்ள இந்தப் புது முயற்சியில் ஈடுபடலாம்.

திரு. என்.எஸ்.வி. சித்தன் : நோட்டுப் புத்தகங்கள் கிடைக்காமல் அவதி ஏற்படக் காரணமே — வருஷ ஆரம்பத்திலே மட்டும் தயாரித்துக் கொடுப்பது என்று இல்லாமல் வருஷம் முழுவதும் கிடைக்கக்கூடிய அளவுக்கு தயாரித்து கிடைக்க ஏற்பாடு செய்வதோடு, Physically handicapped, உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை கொடுக்கும் முறையில் இந்தத் திட்டத்தை அரசு செயல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உடல் ஊனமுற்றவர்கள் என்பதோடு மட்டுமல்லாமல் யாராக இருந்தாலும் நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு முறையாக விண்ணப்பிப்பார்களானால் ஊக்கம் அளிக்கும் முறையில் வருஷம் முழுவதும் தயாரிக்க ஏற்பாடு செய்து நோட்டுப் புத்தகங்கள் கிடைக்க வழி செய்யப்படும்.

திரு. க. அன்பழகன் : இந்தச் சூழ்நிலை மாணவர்களுக்கு பெரிய இடையூறாக, தொல்லையாக இருக்கக் காரணமே பொதுவாகவே தாள் பற்றாக்குறை இருக்கும் நிலையில் பள்ளிக் கூடங்களில், தனியார் பள்ளிக்கூடங்களில் மூன்றாவது, நான்காவது படிக்கும் மாணவர்களுக்கே ஏறத்தாழ 20, 30

[1980 ஜூன் 28

நோட்டுப் புத்தகங்கள், அதற்கு மேலும் கூட ஆண்டு துவக்கத் திலேயே வாங்கச் செய்கிறார்கள். அத்தனை நோட்டுப் புத்த கங்களும் ஆண்டுமுழுவதிலும் கூடப்பயன்படுத்தப்படுவதில்லை. 150 பக்கம் இருந்தால் அதிலே 80 பக்கங்கள் அளவுதான் பயன் படுத்தப்படுகிறது. இப்படி மாணவர்களுக்கு அதிகச் செலவா கிற முறையில் தேவையில்லாமலே அதிகத் தாள் உள்ள அதிகப்படி யான எண்ணிக்கையில் நோட்டுப் புத்தகங்கள் வாங்குகிற நிலையை மாற்ற அரசாங்கம் ஒரு குழு மூலமாக ஆராய்ந்து குறைந்த அளவில் அத்தியாவசியமான தேவைக்கு மட்டுமே நோட்டுப் புத்தகங்கள் வாங்கக்கூடிய நிலையை ஏற்படுத்த பள்ளி நிர்வாகிகளுக்கு ஆலோசனை கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரா சிரியர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும். அதோடு நமக்கு எட்டாயிரம் டன் காகிதம் தேவைப்படுகிற இடத்தில் மத்திய அரசு ஆறாயிரம் டன் ஒதுக்கி, நமக்குக் கிடை கக்கூடியது இரண்டு, மூன்று ஆயிரம் டன்தான். அவசர நிலைமை இருந்த காலத்தில் மத்திய அரசு ஒதுக்கியதை அப்படியே காகித உற்பத்தியாளர்கள் கொடுத்து வந்தார்கள். இப்போது அந்த உத்தரவுக்கு மரியாதை தருவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பள்ளிக்கூட நோட்டுப் புத்தகம் என்பது மிகவும் பெரிய பிரச்சினையாக மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ளது. மத்திய அரசாங்கம் நமக்கு ஒதுக்கவேண்டிய கோட் டாவை ஒதுக்காமல் புறக்கணிக்கிறது என்று எடுத்துக் கொள்ள லாமா? அதற்கு நம்முடைய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மத்திய அரசின் உத்தரவை காகித உற்பத்தியாளர்கள் ஏற்று செயல்படுத்துவது இல்லையென்பதை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதைச் செயல்படுத்தும் வகையைக் காணவேண் டும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இந்த நோட்டுப் புத்தகங்கள் திருநெல்வேலியில் சூப்பர் மார்க்கெட்டில் விநியோ கிக்கப்பட்டு வந்தது. அங்கு தற்போது வேலைநிறுத்தம் காரண மாக மாவட்டம் பூராவும் நோட்டு விநியோகம் தடைப்பட்டிருக் கிறது. இதில் தலையிட்டு முடிவுக்கு கொண்டு வந்து, நோட்டு விநியோகிக்க முன்வருமா ? இதைத் தவிர்க்க அர சாங்கமே நேரடியாக நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும் கொடுக்க முன்வருமா ?

1980 ஜூன் 28]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது நாம் காகிதங்கள் விநியோகிப்பதை தனிப்பட்டவர்களிடமிருந்து எடுத்து நோட்டுப்புத்தகங்கள் தயாரிப்பதை சிறு நோட்டுப்புத்தகத் தயாரிப்பாளர்களிடம் தந்து வருகிறோம். அதிலே நிறையப் பேர் வருவார்களானால் அவர்களுக்கும் கொடுக்கலாம். பாட நூல் நிறுவனமே அதைச் செய்கிற நிலைமை இல்லை. புத்தகங்களை நாம் அப்படிக் கொடுத்துத்தான் அச்சடித்துக் கொண்டிருக்கிறோம். தவறு ஏற்படாத வகையில் எல்லோருக்கும் அந்த வாய்ப்பு தந்துகொண்டிருக்கிறோம். திருநெல்வேலியில் சூப்பர் மார்கெட் ஸ்டிரைக்கில் இருப்பதாகச் சொன்னார்கள். அது பற்றி அரசு ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: அரிசனப் பள்ளிகளுக்குக் கொடுக்கப்படக்கூடிய புத்தகங்கள் மூன்று நான்கு மாதங்கள் கழித்துத்தான் கொடுக்கப்படுகிறது என்பது அரசாங்கத்திற்கும் தெரியும். அதை ஜூன் முதல் வாரத்திலேயே கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இது மூலக்கேள்விக்கு சம்பந்தம் இல்லாதது மட்டுமல்ல, இதுபற்றி அரிசன நலத் துறை அமைச்சரவர்களிடம் கேட்டால் சரியான பதில் கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. மி. வின்செண்ட்: தலைவர் அவர்களே, விநியோகிக்கப்படுகின்ற நோட்டுப் புத்தகங்கள் மாணவர்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேராமல் வியாபாரிகளின் கையிலே அகப்பட்டு அவர்கள் அதிக விலைக்கு விற்கிறார்கள் என்ற தகவல் அரசுக்குத் தெரியுமா? குமரி மாவட்டத்திலே அப்படி விற்கப்படுவதாக தகவல் வந்துள்ளது. அதன்மேல் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்த விநியோக முறையானது, மின்சார வெட்டு, கெட்டி அட்டை பற்றாக்குறை இருந்தும் கூட இந்நிறுவனம் ஆலைகளிலிருந்து பெற்ற 2,100 டன் காகிதம், தனியார்களிடமிருந்து பெற்ற 900 டன் காகிதம் ஆக 3,000 டன் குறிப்பேடுகளையும், பதிவாளர், கூட்டுறவுத் துறை, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ஆகியோரின் துணையுடன் 1981-ம் வருடத்திய எதிர்பார்க்கப் படும் மக்கள் தொகையினை அடிப்படையாகக் கொண்டு தமிழகம் முழுமையும் உள்ள 58 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு ரூபாய் 153·5 இலட்சம் மதிப்புள்ள குறிப்பேடுகள் விநியோகிக்கப்பட்டு உள்ளன. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனமே தன்னுடைய

வட்டாரக்கிடங்குகள்வாயிலாக சுமார்540பள்ளி/கல்லூரி மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும், உள்ளாட்சித் துறை நிறுவனங்களுக்கும் முறையே ரூபாய் 19·7 இலட்சம், 5 இலட்சம் ரூபாய்க்கு இதுவரை குறிப்பேடுகள் வழங்கியுள்ளது. குறிப்பேடுகள் விற்பனையை மேலும் பரவலாக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் வாயிலாக ரூபாய் 14·3 இலட்சத்திற்கான குறிப்பேடுகள் வழங்கப்பட்டு சென்னை மற்றும் புறநகர் பகுதி தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகம் கிளைகள் வாயிலாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. சென்னை நகரச் சில்லரை விற்பனையாளர்களுக்கு பாடநூல் நிறுவனத்தின் திருவான்மியூர் கிடங்கு, மற்றும் கல்லூரிச் சாலை கிடங்குகளிலிருந்து ரூபாய் 6·5 இலட்சத்திற்கான குறிப்பேடுகள் வழங்கப்பட்டு மாணவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. சென்னை அண்ணாசாலையில் பாடநூல் நிறுவனம் அமைத்துள்ள சிறப்பு விற்பனை நிலையம் வாயிலாக மாணவர்களுக்கு குறிப்பேடுகளை நேரடியாய் விநியோகம் செய்து வருகின்றது. தவறுகள் ஏற்படுகிறபோது அதைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே இந்த நோட்டுப் புத்தகங்கள் தட்டுப்பாடு இருப்பதற்குக் காரணம் கேரள மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்படுவது என்று சொன்னார்கள். ஆகவே, கிடைக்கிற நோட்டுப் புத்தகங்களையும் தமிழகத்திலேயே நல்ல முறையிலே விநியோகம் செய்ய அரசு முயற்சியெடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தடுப்பதற்கு எடுத்த நடவடிக்கைதான் இப்படி இருக்கிறது. அதிலேயும் சில்லரை விற்பனைக்கு விற்கப்படுகிறபோது மாணவர்கள் வாங்குவதைப் போல் ஒருவரே சென்று 5, 6 தடவைகள் வாங்கிச் சென்று அதை விற்கிற நிலைமை இருக்கிறது. தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், இந்தக் குறைபாட்டைப் போக்க நாம் ரேஷன் கார்டு தரவேண்டும்.

திரு. மு. ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களையும் கட்டுப்படுத்தி விற்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனியார்களைக் கட்டுப்படுத்துவது என்பதில் — நாம் மட்டும்தான் நோட்டுப் புத்தகம் விற்கிறோம் என்பதல்ல, மலிவு விலையில் விற்கப் படுவதைப்பற்றித்தான் இப்போது கேட்கப்பட்ட கேள்விகளும்

1980 ஜூன் 28]

நான் அளித்த பதில்களும் ஆகும் — அவர்கள் வெளி மார்க்கெட்டிலே பேப்பர் வாங்கி நோட்டுப் புத்தகங்கள் தயாரித்து விற்கிற நிலைமையும் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலேதான் தனியார்களை தவறுகள் செய்யாமல் கூடுமான வரை கட்டுப்படுத்தி மாணவர்களுக்கு விநியோகம் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் – விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்புகள்.

(அ) தீப்பெட்டித் தொழிற்சாலைகள், இராமநாதபுரம் மாவட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ரா. உமாநாத், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. ரா. உமாநாத்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"இராமநாதபுரம் மாவட்டத்தில் 1000-க்கு மேற்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகள் குளோரேட் கிடைக்காததன் காரணமாக மூடப்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வேலையின்மை குறித்து".

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள், சாத்தூர், சிவகாசி ஆகிய வட்டங்களில் அதிகமாகவுள்ளன. தீப்பெட்டித் தொழிற்சாலை இயங்குவதற்கு வேண்டிய மூலப் பொருள்களில் முக்கியமான குளோரேட் கீழ்க்கண்ட தொழிற்சாலைகளிலிருந்து விநியோகிக்கப்படுகிறது.

1. திருவாளர்கள் பாண்டியன் கெமிக்கல்ஸ்.
   (M/s. Pandian Chemicals.)